யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2015

## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | புள்ளித்திட்டம் | சித்திரம் |
|---|---|---|

வினாப்பத்திரம் (சித்திரக்கலை I) - 100 புள்ளிகள்
(சித்திரக்கலை II) - 100 புள்ளிகள்
(சித்திரக்கலை III) - 100 புள்ளிகள்
மொத்தம் 300 புள்ளிகள்
இறுதிப்புள்ளி = 300 ÷ 3
= 100 புள்ளிகள்

சித்திரக்கலை I - பகுதி I - 40 புள்ளிகள்
பகுதி II - அ - 20 புள்ளிகள்
ஆ - 20 புள்ளிகள்
இ - 20 புள்ளிகள்
மொத்தம் - 100 புள்ளிகள்

**பகுதி I க்கான விடைகள்**

| | |
|---|---|
| 1) – 2 | 21) – 3 |
| 2) – 4 | 22) – 3 |
| 3) – 2 | 23) – 1 |
| 4) – 3 | 24) –- 3 |
| 5) – 5 | 25) – 4 |
| 6) – 3 | 26) – 5 |
| 7) – 4 | 27) – 3 |
| 8) – 2 | 28) – 2 |
| 9) – 3 | 29) – 4 |
| 10) – 3 | 30) – 1 |
| 11) – 1 | 31) – 5 |
| 12) – 3 | 32) – 4 |
| 13) – 4 | 33) – 3 |
| 14) – 2 | 34) – 1 |
| 15) – 3 | 35) – 3 |
| 16) – 3 | 36) – 3 |
| 17) – 2 | 37) – 2 |
| 18) – 4 | 38) – 5 |
| 19) – 4 | 39) – 5 |
| 20) – 3 | 40) – 2 |

(40x1= 40 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## பகுதி II

**வினா 1**

1) பழையது - தேவகரம்பொல சில்வரத்தின உனான்சே / நீலபட்ட பெந்தி
புதியது - சோனியஸ் மென்புல் (2 x 2 = 4 புள்ளிகள்)

2) 1. இருபரிமானம் உடையவை
2. தூரநோக்கு அற்றவை
3. பின்னனி வர்ணம் சிவப்பு
4. குறியீட்டு முறையிலான வர்ணப்பிரயோகம்
5. மேல்பகுதியில் சூரிய சந்திர வடிவங்கள்
6. எகிப்திய மற்றும் சியாம் நாட்டு ஓவியங்களின் சாயல்
7. தொடர் சித்திரப்பாங்கு

(6 புள்ளிகள்)

3)

| இல | களனி விகாரை (புதியது) | இசுபத்ராம விகாரை |
|---|---|---|
| 1 | சோனியஸ் மென்புல் ஓவியம் வரையப்பட்ட ஓவியங்கள் | M.சாக்கிலிஸ் ஓவியரால் வரையப்பட்ட ஓவியங்கள் |
| 2 | மரபு - (சிகிரிய மரபு) கீழைத்தேய மரபு | மேலைத்தேய மரபு - யதார்த்தபாணி |
| 3 | இலங்கையின் பௌத்த மத விடயங்களும் முக்கியத்துவமளித்தலும் | புத்தசரிதைக்கு முக்கியத்துவம் அளித்து வரையப்பட்டுள்ளமை |
| 4 | கீழைத்தேய ஆடை ஆபரண உபகரணங்களை சித்தரித்தல் | மேலைத்தேய ஆடை ஆபரண கட்டட (பூர்வா) அமைப்பினை சித்தரித்தமை |
| 5 | ஒரு வர்ணச்சாயல் | பல வர்ணச் சாயல் |

(10 புள்ளிகள்)

**வினா 2**

1) மனிதனும் குதிரைத்தலையும், நீரில் விளையாடும் யானைகள் (2 x 2 = 4 புள்ளிகள்)

2)
- மனிதனும் குதிரைத்தலையும் நீரில் விளையாடும் யானைகள் சிற்பங்கள் பல்வகை கலைமரபை காட்டுகிறது.
- இது கி.பி 7 நூற்றாண்டிற்குரியது
- இவை இந்தியாவின் மாமல்லபுர பல்லவ சிற்பங்களை ஒத்துள்ளது
- நீரை தொடர்புபடுத்தி சிற்பம் (குளங்கள் ஆறுகள்) செய்யுட் பல்லவ பண்பு பேணப்பட்டுள்ளது (நீரில் விளையாடும் யானைகள்)
- பல்லவ இலக்கியத்தில் குறிப்பிடப்படும் நீரும் நெருப்பும் (கோடை, மாரி / வெயில் , மழை) என்ற எண்ணக்கரு சிற்பமாக்கப்பட்டுள்ளது (மனிதனும் குதிரைத் தலையும்)
- நெட்டையான மனித உடல் அமைப்பு (6 புள்ளிகள்)

3)
- ரம்மசு பூங்காவில் இருந்து பெறப்பட்ட சிலை காதலர் சிலையாகும்
- இதில் காதலர்களுக்குரிய அம்சம் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது
- சாலிய குமாரன் அசோகா மாலா ஆகியோரில் காதல் பிணைப்பை வெளிப்படுத்துகிறது என டாக்டர் பரண விதான குறிப்பிடுகின்றார்
- ஆணின் மடியில் பெண் அமர்ந்திருப்பது போல செய்யப்பட்டுள்ளது
- பெண்ணின் உடலில் நளினமும் முகத்தில் வெட்கமும் காட்டப்பட்டுள்ளது
- இதில் காணப்படும் ஆண் உருவம் அன்பாக பெண்ணை அனைத்திருப்பது போல் காட்டப்பட்டுள்ளது.

(10 புள்ளிகள்)

**வினா 3**


1)
- தளம் முழுவதும் நிறையும் வகையில் கூடிய இடப்பரப்பினுள் வரையப்பட்டிருத்தல்
- போதிசத்துவர் வடிவத்தை மிகப்பெரிய பிரமாணத்தில் காட்டப்பட்டு இருத்தல் (பிரதான சரிதையின் பொருட்டு விசேஷமான பிரமாணத்தில் பயன்படுத்தல்)
- உரிய நிகழ்வுக்கு ஏற்ற பின்னனி வடிவங்களை அமைத்தல்
- இயற்கை வடிவமைப்புகளுக்கிட்டிய தன்மை (மனித வடிவம், பிராணிகள், மரம், கொடி, கட்டிடம் ஆகியன)
- கலைத்தன்மையுடன் கூடிய தூரதரிசனத் தன்மை பின்பற்றி இருத்தல்
- பாவ வெளிப்பாட்டின் பொருட்டு முத்திரை மெய்நிலைகளைப் பயன்படுத்தி இருத்தல்

- ☞ வெளி அங்க இலச்சனங்களினூடாக சரிதை இயல்பை வெளிப்படுத்தல்
- ☞ வர்ணச் சாயல் (அயல் வர்ணம்)
- ☞ ஒளி நிழல் மூலம் முப்பரிமாணத்தன்மை வெளிப்படுத்தல்
- ☞ பிரகாசமான வர்ணச் சாயல்களும் மென்மையான இரேகைப் பயன்பாடும்
- ☞ மேலிருந்து பார்க்கும் தன்மையில் தூரதரிசன முறை பின்பற்றி இருத்தல்
- ☞ பக்கத் தோற்றப்பாட்டில் முகமும் பாதமும் வரையப்பட்டிருத்தல்
- ☞ உரிய நிகழ்ச்சிக்கு மேலதிகமாக சூழலைச் சிறப்பாகச் சித்தரித்தல் (4 புள்ளிகள்)

2) அஜந்தா குகைகள் இரு வாஸ்து முறையில் அமைக்கப்பட்டவை அவை

- ➢ சைத்திய மண்டபம்
- ➢ விகாரை மண்டபம்

**சைத்திய மண்டபம்**




இவை கற்பாறையை உள்ளே தோண்டிச் சென்று இறுதியில் வட்டமாகப் பூர்த்தி செய்து உள்ளதுடன் வட்ட வடிவை மையமாகக் கொண்டு கல்சைத்தியம் உருவாக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் நீளத்திற்கு தூண் வரிசையைக் கொண்டிருக்கும். மரத்தால் நிருமாணிக்கப்பட்ட அரைக்கோளவடிவ கூரையுடன் கூடிய கட்டிடத்தில் அரைவளைவுடைய வளைகளைக் கொண்டிருக்கும். இம்மண்டபம் பௌத்த துறவிகளால் தர்ம உபதேசம் செய்வதற்கும், கூட்டம் வைப்பதற்கும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

இலக்கம் 9, 10, 19, 26 குகைகள் சைத்திய மண்டப வகையைச் சார்ந்தவை இவற்றில் காணக்கூடிய கலை நிருமாணிப்புக்களாவன ஸ்தூபியும், தூண்களும் அவற்றில் உள்ள செதுக்கல்களும் ஓவியங்களுமாகும்.

**விகாரை மண்டபம்**

இவையும் கற்பாறையை உள்ளே தோண்டி நிருமாணிக்கப்பட்ட வீட்டின் தன்மையைக் கொண்டிருக்கும். சதுர அமைப்பைக் கொண்ட மண்டபத்தின் மூன்று பக்கங்களிலும் பல அறைகள் காணப்படும். இவற்றிடையே இரு தட்டு மாடிகளும் உள்ளன. இவற்றிற்கு ஏறிச்செல்வதன் பொருட்டு படிவரிசைகளும் நிருமாணிக்கப்பட்டுள்ளன. அங்கு மத்தியில் உள்ள மண்டபத்தைச் சுற்றி அறைகள் காணப்படும். மேல் மாடிகளுக்கு வெளிச்சம் வருவதன் பொருட்டு துவாரங்கள் நிருமாணிக்கப்பட்டு உள்ளன. இவை பௌத்த குருமார்களின் வசிப்பிடமாகவும் காணப்பட்டது. (6 புள்ளிகள்)



3)
- ☞ ஐத்தந்த ஜாதக்கதை
- ☞ புத்தர் பெருமான் கிம்புளவத்புரத்திற்கு வருகை தரல்
- ☞ விஜயனின் வருகை (சிங்கள வருகை)
- ☞ சுவர்ண கன்ஸ ஜாதக
- ☞ வெஸ்ஸந்தர ஜாதக
- ☞ அன்தமுனி ஜாதக
- ☞ சங்கஸ்ஸபுரத்திற்கு வருகை தரல்
- ☞ அப்சரா வடிவம்

மேற்குறிப்பிட்ட ஓவியங்கள் 17 வது குகையில் வரையப்பட்டுள்ளது இவற்றில் சில ஓவியங்களை உதாரணமாகக் கொண்டு விளக்கப்பட வேண்டும். (10 புள்ளிகள்)

**வினா 4**

1)
- ☞ சிறந்த கலைஞர்களை இனங்கண்டு ஊக்குவித்தமை
- ☞ இன மத பேதமின்றி சிறந்த கலைஞர்களுக்கு பாரசீகத்திற்கு அனுப்பி ஓவியம் பயிற்றுவித்தமை
- ☞ "ஆயத்தன" என்ற நுண்கலை கல்வியை ஸ்தாபித்தமை
- ☞ அரச தலைவர்களில் சித்திரங்கள் அடங்கிய "அக்பர் நாம" என்ற நூல் வெளியிடப்பட்டமை
- ☞ சித்திரத்திற்காக கடதாசியை பாரசீகத்தில் இருந்து வருவித்தமை (4 புள்ளிகள்)

2) இராகமாளிகை என்னும் சுரங்களின் ஏற்றத்தாழ்வுக்கு ஏற்ப மனித மனத்தில் உருவாகின்ற இயல்பான கூடிய சேர்க்கையே இச்சித்திரங்களின் இயல்பாகும். ஒரு இராகத்தின் கீதமும் சுரங்களின் ஏற்றத்தாழ்வின் காரணமாக ஏற்படுகின்ற மனக்கிளர்ச்சியின் தன்மையையும் சித்திரத்தின் ஊடாக வசனங்களால் வெளிப்படுத்தப்படும் கருத்தும் ஏழு சுரங்களின் அமைப்புக்கு ஏற்ப உருவாகின்ற இசைக்கோலத்தையும் சித்திர ஊடகத்தினைப் பயன்படுத்தி நேரடியான பார்வைக்குரிய நிருமாணிப்பாக உருவாக்குதலாகும். இவற்றிடையே ஆண் இராகம் ஆறு (06) உள்ளதுடன் அவை ஒன்றிற்கொன்று தொடர்புபட்டு ராகினி என்னும் பெயரில் பெண் இராகமாக அமைந்துள்ளது.

இராகம் - இவற்றில் காணப்படும் வடிவங்கள் யாவும் பெரும்பாலும் குறியீட்டை மையமாகக் கொண்டே உருவாக்கப்படும்

உதாரணம் :- தோடி ராகம்

3) மோகல் - மோகல் சித்திரக் கலைக்கு தொனிப்பொருளாக அமைவன இஸ்லாமிய சமயத்தை அடிப்படையாகக் கொண்ட மோகல் அரச குடும்பத்தவர்களின் பிரதானிகளின் மார்பளவு வடிவை வரைவதே பெரும்பாலும் நிகழ்ந்தன. சாதாரண மக்களின் வாழ்க்கை நிகழ்வுகள் மோகல் சித்திரங்களுக்கு தொனிப்பொருளாக பெறப்படவில்லை. அரச குடும்ப நிகழ்வுகள், அரசன் விரும்பும் வேட்டைக்காட்சியும் இயற்கைக்காட்சியும் மோகல் சித்திரங்களுக்கு தொனிப்பொருளாகக் கொள்ளப்பட்டன. ராஜ்புட் கலைஞர் மோகல் கலைஞரிலும் பார்க்க மிகப் பரந்த தொனிப்பொருட்களின் கீழ் சித்திரங்கள் வரைந்துள்ளனர். இந்து இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட சிருங்கார செய்திகள் கிராமிய மக்களின் வாழ்க்கை காதல் போன்ற எண்ணக்கருக்கள் இராஜ்புட் சித்திரங்களுக்கு தொனிப்பொருளாக அமைந்தன. இராஜமாளிகை என்னும் பெயரில் பல சித்திரங்களும் இவற்றிடையே உள்ளன. இராஜ்புட் சித்திரக்கலை இந்துகலைச் சம்பிரதாயம் எனப் பேணப்பட்டன. விசேஷமாக அவர்களது பிரதான தலைப்புக்களாக அமைந்தவை இந்து இலக்கிய ஆக்கங்களாகும்.

மொகலாய ஓவியக்கலை பாரசீக தழுவல்களைப் பெற்றிருக்க இராஜபுத்தரின் ஓவியங்கள் பண்டை இந்திய (அஜந்தா, பார் எல்லோரா) ஓவியங்களின் தழுவல்களைப் பெற்றது.

ஓவியங்களை சுற்றி கொடியிலை அலங்காரம் போடுதல், தங்க நிறம் பூசுதல், விலங்குருவம் முக்கியத்துவம் போன்ற சில பண்புகள் இரு ஓவிய மரபிலும் காணப்படுகிறது.

(10 புள்ளிகள்)

**வினா 5**

1) கிளொட்மொனே, எட்வாட் மனோ, எடகாட் டெகாஸ், ரெனோவா (4 புள்ளிகள்)

2) அகவய யதார்த்த வாத ஓவியராக "சர்வதோர் டாலி" கருதப்படுகின்றார்
இவரது நீங்காத கனவு, தீப்பற்றிய ஜிராப் போன்ற படைப்புக்கள் சிறப்பானவை
சர்ரிலிச ஓவியங்களில் காணப்படும் உருவங்கள் விநோதமாக காட்சியளிக்கும்
கருப்பொருளை இலகுவாக கண்டுபிடித்து விடலாம்
கனவுக்காட்சிகள் / புனைவுக் காட்சிகள் முக்கிய இடத்தை பெறும் (6 புள்ளிகள்)

3) ஐர்சன் பொலர் சுசைதார் அரூப ஓவிய மரபை கையாண்டார்
மிகப்பெரிய கன்வஸ்துணியை நிலத்தில் விரித்து அதன் மீது கை அசைவினால் நிறத்தனை உந்தி சித்திரத்தைப் படைத்தார்
இவரது ஓவியங்கள் சட்டகம் அற்ற நிலையில் சுவரின் ஒரு பகுதியாக மாறியிருந்தது.
இவரது ஓவியங்கள் பல இலக்கங்களின் பெயரினால் அழைக்கப்பட்டது
விரைவான தூரிகை அசைவு ஆழ்மன உணர்வுகளை வெளிப்படுத்தும் என இவர் கருதினார்
இசையும் ஒலியும் ஒரே பாதையில் செல்லக் கூடியவை என்பதை தனது படைப்புக்களின் ஊடாக வெளிப்படுத்தினார் (10 புள்ளிகள்)

**வினா 6**

1) கரகாண பொம்பே (ஒகஸ்டஸ்) வெஸ்பேசியன் றஜன் (4 புள்ளிகள்)

2) ஈரமான சாந்தின் மீது கண்ணாடித் துண்டுகளை ஒட்டி உருவாக்கும் சித்திரம்
இதற்கு உள்ளடக்கப்பட்ட கண்ணாடித்துண்டுகள் / பீங்கான் துண்டுகள் / உலோகத்துண்டுகள் பயன்படுத்தப்படும் இத் துண்டுகள் டெசரி எனப்படும்.
இச் சித்திரங்கள் இருபரிமானத் தன்மை கொண்டதாக காணப்படும்
உருவங்கள் ஒரே தளத்தில் நிறுத்தப்பட்டிருப்பதால் தூரதரிசன கோட்பாட்டை காண முடியவில்லை
உருவங்கள் நெட்டையாகவும் விறைப்புப்பாங்கானதாகவும் காணப்படும்
அரச உருவங்களில் தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் காணப்படும்
ஒளிபட்டுத் தெறிப்பதால் சித்திரங்கள் பளபளப்பானதாக காணப்படும் (6 புள்ளிகள்)

3) சன்சிட்டர் ஆலயத்தில் வரையப்பட்டுள்ள தியடோரா இராணியும் சேவகர்களும் என்ற மொசாய்க் சித்திரம் அழகுவாய்ந்தது
தங்கப் பாத்திரம் ஏந்திய நிலையில் தியடோராவும் அவரது சேவகர்களும் காணப்படுகின்றனர்
நீளமான உடை அணிந்தவாறு காணப்படுகின்றனர். இவர்களில் உடை மடிப்புக் கண்ணாடித் துண்டுகளால் ஆக்கப்பட்டுள்ளது
தியடோரா இராணியில் தலைக்குப் பின்புறம் ஒளிவட்டம் காணப்படுகிறது
நேராக நிற்கும் இவர்களில் விறைப்பு தன்மை மேலோங்கி காணப்படுகிறது. (10 புள்ளிகள்)